දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපෑල
மின் - அஞ்சல்
E-mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/EST/09-03/ 08/2019

ඔබේ අංකය
உமது இல.
Your No.

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla


දිනය
திகதி
Date
2021.06.30

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை : 01/2021

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

**நாடளாவிய சேவைகளின் விசேட தரத்திற்குப் பதவியுயர்வு பெற்ற உத்தியோகத்தர்களை விசேட தரத்தின் பதவிகளுக்கு நியமித்தல்**

01. நாடளாவிய சேவைகளின் விசேட தரத்திற்கு எதிர்வரும் காலங்களில் பதவியுயர்வினைப் பெறும் உத்தியோகத்தர்கள் குறித்த சேவையின் விசேட தரத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியொன்றிற்கு நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அந் நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட தினத்திலிருந்து 02 வார காலப்பகுதிக்குள் புதிய பதவியின் கடமைகளைப் பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். அவ்வாறு கடமை நிமித்தம் 02 வாரங்களுக்குள் சமுகமளிக்காத உத்தியோகத்தர்களின் விசேட தரத்திற்கான பதவியுயர்வினை இரத்துச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

02. நாடளாவிய சேவைகளின் விசேட தரத்திற்குப் பதவியுயர்வினைப் பெற்றிருப்பினும் கீழுள்ள தரமொன்றின் பதவியொன்றில் தற்போது சேவையாற்றும் விசேட தரத்தைச் சார்ந்த உத்தியோகத்தர்களை சேவையின் தேவைப்பாட்டிற்கு அமைவாக ஒவ்வொரு சேவைகளினதும் விசேட தரத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு 2021.08.31 ஆம் திகதிக்கு முன்னர் நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை குறித்த சேவைகளின் நிர்வாக அதிகாரிகள் மேற்கொள்ளல் வேண்டும்.

03. நாடளாவிய சேவைகளின் விசேட தரத்தைச் சார்ந்த பதவியொன்றிற்கு தற்போது நியமிக்கப்பட்டிருப்பினும் இதுவரை விசேட தரத்தைச் சார்ந்த பதவியின் கடமை நிமித்தம் சமுகமளிக்காத உத்தியோகத்தர்களுக்கு விசேட தரத்தைச் சார்ந்த பதவியின் கடமை நிமித்தம் சமுகமளிப்பதற்காக 2021/07/31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினை வழங்கி அத் தினத்திலிருந்து ஒரு பஞ்சாங்க மாத காலத்திற்குள் பதவியினைப் பொறுப்பேற்காத உத்தியோகத்தர்களை தாமாகவே தமது பதவியை வெறிதாக்கிய உத்தியோகத்தர்களாகக் கருதி நிர்வாக அதிகாரிகள் மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

04. புதிய பதவியின் கடமைகளைப் பொறுப்பேற்கக் கூடியவாறு மேற்படி தொடரிலக்கம் 01, 02 மற்றும் 03 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது அனைத்துத் திணைக்களத் தலைவர்களினதும் பொறுப்பாகும். அவ்வாறு உத்தியோகத்தர் ஒருவரை உரிய வகையில் விடுவிக்காமையின் காரணமாக ஏற்படக் கூடிய சிக்கல்கள் தொடர்பில் உத்தியோகத்தரை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாத குறித்த நிறுவனத் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு